செய்தி வெளியீடு **நாள் : 14.6.2025**

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் சிஎம்டிஏ சார்பில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் துறை சார்ந்த அலுவலர்கள், கட்டிடக் கலைஞர்கள் (Architects) மற்றும் ஆலோசகர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (14.6.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் 2025-2026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் துறை சார்ந்த அலுவலர்கள், கட்டிடக் கலைஞர்கள் (Architects) மற்றும் ஆலோசகர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.பாலசுப்பிரமணியன், திரு.ரவிக்குமார் தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.பாலமுருகன், தலைமை நிர்வாக அலுவலர் திருமதி.மு.இந்துமதி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate ™